23.07.2025

O.S.No. 239/2021

DW1– முத்துப்பாண்டி – த/பெ. வேலுத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.07.2025

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. வாதி முருகன் எனது ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான்.

2. போத்தித்தேவர் மகன் சுப்பிரமணியனிடருந்து நான் எதிருரையில் கோரிய சொத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. போத்தித்தேவர் மகன் சுப்பிரமணியனிடருந்து வாதியின் மனைவி பி.வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அது வடபக்கம் உள்ள சொத்து.

4. வாதியின் மனைவி வடபகுதியில் உள்ள சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றாலும், மேற்குபகுதியில் உள்ள சொத்தை கிரையம் வாங்கினார் என்றாலும் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆவணம் சுப்பிரமணியனுடையது தான். அதிலுள்ள கையொபப்மும் சுப்பிரமணியனுடையதுதான். **மேற்படி ஆவணம் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. வாதி குடியிருந்து வரும் வீட்டை தவிர அவருக்கு வேறு வீடு இல்லை என்றால் எனக்கு தெரியாது.

7. வாதி குடியிருந்து வரும் இடமானது சாவடி. சாவடியை தவிர அவருக்கு குடியிருந்து வர வேறு வீடு கிடையாது என்றால் எனக்கு தெரியாது.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சுப்பிரமணியத்தேவர் மகன் தங்கசாமிய்யத்தேவர் என்பவர் தபசில் 161/10 ல் உள்ள சொத்தை மேல்கடைசியில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. மேற்படி ஆவணமானது 2010ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டு, அதற்குபின்பு 13 நபர்கள் சொத்து வாங்கியுள்ளனர்.

9. பி.வா.சா.ஆ.3 வழக்கில் மேற்படி பத்தியில் உள்ள ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. வாதியின் மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் எனக்கு தெரியாது.

10. இதுவரை வாதியின் மனைவி பெயரில் உள்ள கிரைய ஆவணம் நடைமுறையில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

11. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் என்வசம் தான் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. என்னிடம்காட்டப்படும் பி.வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம்தான் சுப்பிரமணியன் கையொப்பம் என்றால் இல்லை.

13. பி.வா.சா.ஆ.1 மோசடியான ஆவணம் என்றால் இல்லை.

14. கணபதியம்மாள் 2015ல் தாவா சொத்தை வாங்கிய பின்பு தாவா சொத்தின் மேற்குபகுதி தென்மூலையில் மாட்டுத்தொழுவம் அமைத்து பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். ஆனால் மேற்படி சாவடி நான் அளவீடு செய்தபிறகு தான் அமைத்தார்கள்.

15. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கிரையம் வாங்கிய பின்பு நான் தாவா இடத்தில் அனுபவத்தில் அளவீடு செய்து இருந்து வருகிறேன். 2021ல் நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையை அணுகி தாவா இடத்தை அளவீடு செய்ய மனு கொடுத்து, அந்த உத்தரவின் அடிப்படையில் அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். அந்தஇடம் சுப்பிரமணியன் அனுபவத்தில் இருந்து வந்தது. சாட்சி தற்போது நான் தான் அனுபவத்தில் இருந்துவந்தேன் என கூறினார்.

16. 2021ல் நிலத்தை அளவீடு செய்தபோது வாதி சாவடி அமைத்து செட் அமைத்திருந்ததால் நான் ஆட்சேபனை செய்தேன் என்றால் சரிதான். 2021ல் அளந்தபோது எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் 3 செண்ட் இடத்தில் சாவடி இருந்தது. அது வாதி முருகனுடைய சாவடி.

17. சாவடிக்கு வடக்குபக்கம் மாட்டுட்தொழுவம் இருந்ததா என்றால் கிடையாது, 2021ல் அளந்த பின்புதான் ஓலைக்குடிசை அமைத்து தொழுவம் இருக்கிறது.

18. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை சுப்பிரமணியன் எழுதிக்கொடுக்கவில்லை, அதை நான் மோசடியான நபரிடம் இருந்து எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல.

19. கணபதியம்மாள் 2015ல் இருந்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார், அதற்கான தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

20. எதிரிடை கோரிக்கையில் நான் கோரியுள்ள தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டிருந்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தையும் ரத்து செய்ய நான் விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

21. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 ஆவணம் தபசில் சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் 19வது நபராக வாதியின் மனைவி பெயர் உள்ளதா என்றால் சரிதான். ஆனால் எனது பெயருக்கு அடுத்துதான் உள்ளது.

22. நான் எனது இடத்தில் வாதி சாவடி அமைத்தது தொடர்பாக காவல்நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி எனக்கு முன் தாக்கல் செய்துவிட்டதால் நான் தாக்கல் செய்யவில்லை.

23. நான் எதிருரையில் கூறியுள்ளவாறு 2021க்கு பின்புதான் வாதி செட் அமைத்து ரூம் கட்டியுள்ளார் என்பது பொய் என்றால் சரியல்ல.

24. வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தானது எதிர்கோரிக்கையில் கூறியுள்ள சொத்திற்கு வடபகுதியில் உள்ளது.

25. நான் உண்மையில் பி.வா.சா.ஆ.1 மூலம் கிரையம் வாங்கியிருந்தால் தெற்கு எல்லையாக வாதியின் மனைவி கணபதியம்மாள் வா.சா.ஆ.9 ஆவணத்தில் தெற்குபகுதி எல்லையாக எனது இடம் காட்டப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.9 ஆவணத்தில் எல்லையாக வடக்கும், தெற்கும் சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

27. நான் மோசடியான ஆவணங்களை வைத்து நான் எதிரிடை கோரிக்கை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

28. உண்மையில் நான் 2015ல் கிரையம் வாங்கயிருந்தால் அதில் வீடு கட்டியிருப்பேன், எனது அனுபவத்தை நிரூபிக்க வேலியோ, வீடோ கட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. அது காலிமனையாக தான் இருநது வந்தது. வாங்கிய காலத்திலிருந்தே எனதுசொத்து காலிமனையாக தான் இருந்து வந்தது.

29. நான் சொல்வதுபோல் எதிரிடை கோரிக்கை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, வாதியின் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல, வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.